
# புதிய மலர்கள்

(சிறுவர் பாடல்கள்)

என்.வி.சிவநேசன்



# புதிய மலர்கள்

(சிறுவர் பாடல்கள்)

பாடல் ஆசிரியர் :

**என்.வி. சிவநேசன்**



***N.V. SIVANESAN***

**POST FACH - 4026,**
**58675 HEMER, GERMANY,**
**TEL. & FAX : 02371-539106**

## நூல் விபரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ புதிய மலர்கள் |
| ஆசிரியர் | ➢ என்.வி. சிவநேசன் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2000 |
| பதிப்பு விபரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.2 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 14 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 88 |
| நூலின் விலை | ➢ ரூ. 19.00 |
| அட்டைப்பட ஓவியம் | ➢ திரு. ராமு |
| லேசர் வடிவமைப்பு | ➢ கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர், சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ எம்.கே. எண்டர்பிரைஸஸ் சென்னை - 5. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |

# சிவமயம்



ஐங்கரனே ஐங்கரனே
அறிவினில் சிறந்தவனே
அனைவரின் நாவினில் நிற்பவனே
இவ்வுலகு நலம் பெறும்
நற் கவி நான் படைக்க
உன்னருள் தந்து
அணைத்தென்னை உயர்த்திடுவாய்.



# காணிக்கை

" தாயிற் சிறந்த கோவிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை"

'அறிவுடை மாந்தரை அகிலம் போற்றும்'

என அடிக்கடி கூறி, அடிக்காமல் அன்பு காட்டி என் அறிவுக் கண்ணைத் திறந்த என் அன்புத் தந்தைக்கு இவ்விதழைக் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்.

'அன்பு தான் கோவில், அன்பு தான் தெய்வம்' என்று கூறும் என் அன்புத் தெய்வம் என் தந்தை. அடித்து வளர்க்காமல் அன்பால், பண்பால் வளர்த்தெம்மை ஆளாக்கியவர். பொதுவாக தந்தையைக் கண்டால் பயந்து ஓடி ஒளிக்கும் பிள்ளைகளை நாம் கண்டிருக்கின்றோம். இதற்கு மாறாக ஓடிச் சென்று அரவணைத்து

தோளில் ஏறிச் சவாரி செய்தவன்தான் நான். அப்படி எம்மை அன்பால் அரவணைத்தவர்.

சிறு வயதில் நான் வெளிநாடு வந்தாலும், இன்றும் என் தந்தை உயிருடன் இருக்கின்றார் என்ற நினைவலைகளே என் நெஞ்சில் ஊஞ்சலாடுகின்றது. அவரின் இறுதிக் காலத்தில்கூட ஒருமுறை அவரைச் சென்று பார்க்க முடியாமல் போய்விட்டதே என்று எண்ணும் போதெல்லாம் என் மனம் வேதனைத் தீயைத் தொட்டு விடுகின்றது.

என்றும் உங்கள் நினைவுடன்
மகன்
**வேலு சிவநேசன்**
16-01-2000



# அணிந்துரை

குழந்தைகளுக்கான கலை இலக்கியமென்பது வளர்ச்சியடைந்த மேலைத்தேய மொழிகளில் நிலைபெற்றுவிட்ட ஒன்று. வளரும் குழந்தைகளின் மனோவளர்ச்சியினை, உளவியல் ரீதியில் ஆய்வு செய்து அவர்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் படைப்புக்களை, அந்நாடுகளில் நிறையவே காணலாம். பாடல்களாக, கதைகளாக, நாடகங்களாக, திரைப்படங்களாக எல்லா கலை இலக்கிய ஊடகங்களினூடாகவும் குழந்தைகள், பிரக்ஞை பூர்வமாக நோக்கப்படுவதற்கு குழந்தைகள் பற்றிய ஆரோக்கியமான மனப்பாங்கே காரணமாகிறது.

குழந்தைகள் பூவினும் மெல்லிய மனதையுடையவர்கள். அவர்களது உலகம் எம்மால் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியாததொன்று. அவர்களது அனுபவங்கள் அலாதியானவை. அதற்குள் நாம் குழந்தை மனதை

இழந்துவிட்டு நுழைய முடியாது. குழந்தை மனமென்பது மானுட நேசத்தின் உச்சக்கட்ட விளைவு. அது ஆரோக்கியமானதோர் சமூகத்திலேயே சாத்தியமாகும். இதற்கு ஒரு சமுதாயமானது கலை, இலக்கியம் பண்பாடு என்பவற்றில் கருத்தியல் ரீதியாக வளர்ச்சியைக் கண்டிருக்க வேண்டும். இதனை வளர்ச்சியடைந்த நாடுகளில் நாம் காணக் கூடியதாகவுள்ளது.

மேலைத்தேய கல்வி முறையானது அவர்களது மனோநிலையினூடாகவே வளர்த்தெடுக்கப்படுகிறது. ஆனால் எமது நாட்டில் எமது மொழியில் இவைகளை அவதானிக்கையில் இவற்றிலெல்லாம் வருத்தமே மிஞ்சுகின்றன. குழந்தைகளுக்கான பாடல்களைப் பலர் எழுதியிருந்தாலும் குழந்தைகளுக்கான சினிமா, நாடகம், இலக்கியம் என்பவையெல்லாம் தீவிரமாக வளர்த்தெடுக்கப்படவில்லையென்றுதான் கூறவேண்டும். இதைவிட மோசமானது இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் குழந்தைகள் தப்பான வழிகளிலேயே பயன்படுத்தப்படுவதையும், அவர்களது எதிர்காலம் சிதைக்கப்படுவதையும் நாம் வேதனையுடன் ஒப்புக் கொள்ளத்தான்

வேண்டும். 'குழந்தமை' என்ற பண்பினூடாக வளர்த்தெடுக்கப்பட வேண்டியவர்கள், அதைப் பறிகொடுப்பதோடு பெரியவர்களின் நலன்களுக்காக அழித்தொழிக்கப்படுவதென்பது எமது நாட்டின் வக்கரித்துப்போன அரசியல் பண்பாட்டு நிலைக்குச் சான்று.

இந்நிலையில் புலம் பெயர் நாடுகளில் எல்லா வசதிகளோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் சந்ததி தம் எதிர்காலச் சந்ததியான இன்றைய குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி கருதி அதற்கான வழிமுறைகளில் இறங்குவது வரவேற்கப்படக்கூடியதொன்று. குழந்தைகளுக்கான கலை, இலக்கியம் என்பது இங்கிருந்து முகிழ்ப்பதற்கான நம்பிக்கையின் சிறு சிறு கீற்றுக்களாகக் கருதி, இங்கு வெளிவரும் அத்தகைய படைப்புக்களை அணுக வேண்டும். இந்தச் சூழலில் தான் திரு. என்.வி. சிவநேசன் அவர்களின் குழந்தைகளுக்கான இந்தப் பாடல் தொகுப்பினை நான் பார்க்கின்றேன்.

இன்றிருக்கும் ஊடக வசதிகளை இதற்காக தாராளமாகவே பயன்படுத்திக் கொள்ளலாம்.

வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிகளில் இன்று ஏராளமான குழந்தைகள் கலந்து கொள்கிறார்கள். மிகுதியான ஆர்வம் இவர்களில் வெளிப்படுகின்றது. இதனைச் சரியான வழிகளில் ஆற்றுப்படுத்த வேண்டிய பொறுப்பு எமக்கிருக்கின்றது. தெரிந்தோ தெரியாமலோ அவர்களது உள்ளங்களில் நாம் வேண்டாதவற்றை விதைத்துவிடவே கூடாது. எமது மொழி ஒரு மாபெரும் நாகரீகத்தினூடாக அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். எம்மிடமிருந்த, இருக்கின்ற செல்லரித்துப்போன பழமைகளைத் திணிப்பதாக இருக்கக்கூடாது. எம்மிடமிருக்கும் ஜாதி, மத வேறுபாடுகளை, மரணங்களை ஆராதிக்கும் மனநிலைகளை அவர்களின் பிஞ்சு உள்ளங்களை நெருங்கவிடாமல் செய்வதில் எல்லாப் படைப்பாளிகளும் அவதானம் கொள்ளவேண்டும்.

இந்த நூலினை வெளிக்கொணரும் ஆசிரியர் என்.வி. சிவநேசன் அவர்களின் சில பாடல்களை நான் எனது சிறுவர்முற்றம் நிகழ்ச்சியில் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கின்றேன். மிகவும் எளிமையான

தமிழில் பாடல்களை எழுதியிருப்பதால் குழந்தைகளும் இலகுவாக மனனம் செய்யக்கூடியதாக இருக்கின்றது.

உதாரணமாக அவர் எழுதிய தமிழ்மொழியைப் பற்றிய பாடல் குழந்தைகள் எமது மொழியின் பெருமையை விளங்கக்கூடிய விதத்தில் உள்ளது. இதை விட "ஒன்றும் ஒன்றும் இரண்டாகும்" என்கின்ற பாடலில் குழந்தைகளுக்கு நல்ல அறிவைப் புகுத்துகின்றார். அன்புடன் வாழப் பழகுதல், ஏழை எளியவர்களுக்கு உதவுதல் போன்ற நல்ல சிந்தனைகளை பாடலினூடாக புகட்டுகின்றார். எளிமையான தமிழில் குழந்தைகளுக்கான பாடல்களை எழுதுவதில் ஆர்வமிக்க இவர் இதனை ஒரு பணியாகவே செய்கின்றார் என்பதை, இந்நூலை வெளிக் கொண்டுவருவதன் மூலம் உணர்கின்றேன்.

எமது மொழியை எம் சிறார்கள் மறந்துவிடாதிருக்க வேண்டுமென்பது மட்டுமே இப்படியான படைப்புக்களின் நோக்கமாயில்லாமல், அவர்களது ஆரோக்கியமான மனநிலையை மிக உயர்ந்த பண்பாட்டினூடாக வளர்த்தெடுக்கப்பட

வேண்டுமென்பதும் பிரதான நோக்கமாயிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். மேலும் இத்தகைய நூல்களும், மற்றும் குழந்தைகளுக்கான அனைத்து கலை, இலக்கிய வெளிப்பாடுகளும் எமது மொழியில் வெளிவரவேண்டுமென்ற ஆவலோடு, இந்நூலினை வெளியிடும் திரு. என்.வி. சிவநேசன் அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு மேலும் இத்துறையில் அவர் மேலும் பல பரிமாணங்களைத் தொட வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி. நவாஜோதி**
தயாரிப்பாளர்
சிறுவர் முற்றம் (T.R.T)
உலகத்தமிழ் வானொலி

பிரான்ஸ்
6.01.2000



# ஆசிரியர் முன்னுரை

என் இனிய தமிழ் மக்களுக்கு வணக்கம்.

எமது நாட்டின் போர்ச் சூழலினால் எம்மின மக்கள் பல நாடுகளுக்கு இடம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். இப்படி புலம் பெயர்ந்து வாழும் எம்மின மக்களின் வருங்காலச் சந்ததியினர் தமிழ் தெரியாத ஒரு சமூகமாக மாறும் அபாயம் உண்டு. எமது வருங்காலக் குழந்தைகள் எந்தக் காலக் கட்டத்திலும் எங்கள் தாய்மொழி தெரியாமல் வளரக் கூடாது. இதற்கு என்னாலான பங்களிப்பினைச் செய்யவேண்டும் என மனதில் கொண்டு, எம் இனிய தமிழ் பேசும் குழந்தைகளுக்காக எளிய தமிழில் பல பாடல்களை யாத்து, குழந்தைகள் இப்பாடலைப் பாடிப் பயன் பெறும் வகையில் சிறிய நூலாக 'புதிய மலர்கள்' இதழை உங்கள் கைகளில் தவழ விடுகின்றேன். 'புதிய மலர்கள்' பாடல்கள் என்றும் உங்கள் உள்ளத்தைத் தொட்டு உறவாட வரும் இனிய பாடல்களே என்பது திண்ணம்.

குழந்தைகளுக்கு நேரடியாக எதையும் கற்பிப்பதிலும் பார்க்க பாடல் வாயிலாகக் கற்பிக்கும் போது குழந்தைகள் அவற்றை மிக விரைவில் கற்றுக்கொண்டு விடுகின்றன. இதனால்தான், குழந்தைகளின் வாய்வழிப் பிறந்த நடைமுறைச் சொற்களைக் கொண்டே பல பாடல்கள் வடித்திருக்கின்றேன். இங்கு பிறந்த எம் சிறார்களுக்கு எளிய தமிழில் பாடல்களைக் கொடுத்தால்தான் மிக விரைவில் பாடலும் புரியும். இலகுவாக மனனம் செய்யவும் ஏற்றதாக இருக்கும். பாடல்கள் மூலம் கூறும் கருத்துக்களையும் புரிந்துகொண்டு நல்லவர்களாக வாழப் பழகுவார்கள். உதாரணமாக, 'கொக்கண்ணா', 'பந்து', 'தம்பி', 'என் தங்கை' போன்ற பாடல்கள் இயற்கையாக, நடைமுறையில் உள்ளவற்றை பாடல்கள் வாயிலாகக் கூறியுள்ளேன்.

நண்பர்கள், உறவினர்கள் வீடுகளுக்குச் செல்லும் போது அங்குள்ள மழலைகள் சிந்திய அமுத வரிகளை அப்படியே என் நெஞ்சத்தில் அழைத்துக்கொண்டு அவற்றை கருவாகக்கொண்டே பல பாடல்கள் எழுதப்பட்டுள்ளது. ஒரு தங்கை தனது அண்ணாவைப் பார்த்து 'அண்ணா இங்கே

வாருங்கள்' என்றார். அந்த முதல் வார்த்தையைக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் "அண்ணா இங்கே வாருங்கள்" என்ற பாடல். அது போன்று பிள்ளையார் படத்தைக் காட்டி யார் இவர் என்று வேறு ஒரு சிறுமி என்னிடம் கேட்டார். அப்போ நான் சொன்னேன். யார் யார் பிள்ளையார் என்று. அந்த வார்த்தையிலிருந்து எழுந்த பாடலே 'யார் யார் பிள்ளையார்' என்ற பாடல். இப்படி பலவற்றைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இவ்வாறு குழந்தைகளின் மழலைச் சொற்களிலிருந்து எளிய தமிழில் உருவான பாடல்களே இவை. எனவே அன்பான பெற்றோர்களே! உங்கள் மழலைகளுக்கும் இவ்வினிய பாடல்களை ஊட்டி விடுங்கள். இப்பாடல்கள் தமிழ் மணமும், தெய்வீக சிந்தனையும், அறிவுக்கு வழிகாட்ட உதவும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**நன்றி...**

இந்நூலினை உருவாக்க உதவியர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். முதலில்


என் தாய், தந்தைக்கும், அறிவூட்டிய ஆசிரியர்களுக்கும், சகோதரர்களுக்கும், இரவு பகலாக கணணியில் பாடல்களைப் பதிவு செய்து, இந்நூலினை வடிவமைத்து உதவிய என் மனைவிக்கும், இடையூறு செய்யாமல் இருந்த என் அன்பு மகனுக்கும் என் நன்றி. மேலும் எனது பாடல்களை நூலாக வடிவமைக்க முன்பே வானொலி மூலம் சொல்லிக்கொடுத்து குழந்தைகளின் உள்ளங்களில் பாடல்களைப் பதிய வைத்தது மட்டுமின்றி இம்மலருக்கு பல சிரமங்களுக்கு மத்தியிலும் அணிந்துரையும், ஆலோசனையும் தந்த T.R.T. சிறுவர் முற்றத் தயாரிப்பாளர் மதிப்புக்குரிய சகோதரி திருமதி நவாஜோதி (பிரான்ஸ்) அவர்களுக்கும் என் நன்றி.

இவ்விதழைப் பொங்கல் விழாவில் வெளியிடக் கேட்டபோது எதுவித மறுப்புமின்றி சம்மதித்த, 'வாழும்போதே கலைஞர்கள் கௌரவிக்கப்படல் வேண்டும்' என்ற கொள்கை கொண்ட மதிப்புக்குரிய தமிழருவி ஆசிரியர் நயினை விஜயன் அவர்களுக்கும், 'கமலம்' சஞ்சிகை ஆசிரியரும், உ.த.ப. இயக்கத்தலைவர் (ஜேர்மன் கிளை) மதிப்புக்குரிய கமலநாதன்

அவர்களுக்கும், உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க பொதுச்செயலாளர் மதிப்புக்குரிய கே.ரி. கணேசலிங்கம் அவர்களுக்கும், 'ஈழம்' பத்திரிகை ஆசிரியர் மதிப்புக்குரிய பி.சி. இராசகருணா அவர்களுக்கும், இன்பத் தமிழ் வானொலி (ஆஸ்திரேலியா) இயக்குனர் மதிப்புக்குரிய பா. பிரபாகரன் அவர்களுக்கும், ஆசிரியர் மதிப்புக்குரிய யோகேஸ்வரன் (இலண்டன்) அவர்களுக்கும், மற்றும் நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

என்றும் தமிழை நேசிக்கும்
**என்.வி. சிவநேசன்**
ஆசிரியர்
'புதிய மலர்கள்'
மலரும் மாலைகள் வீடியோப் பத்திரிகை

ஜெர்மனி
15.01.2000



# முன்னுரை

எனது அன்பிற்கும், மதிப்புக்கும் உரிய நண்பன் மலரும் மாலைச் சிவநேசன் அவர்கள், எப்போதுமே கலையார்வமும், தமிழார்வமும் கொண்டவர் என்பதை அவருடைய கடந்தகாலச் செயற்பாடுகளிலே காணக்கூடியதாக இருந்தது. எனவே அவரது எண்ணங்கள் வலிவு பெறவும், பயன் தரவும் எமது உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க செருமன் கிளையின், துணைக்கலைப் பொறுப்பாளராக பொறுப்பளித்தோம். அத்தகைய என் இனிய நண்பர் இன்று குழந்தைகளுக்காக, அவர்கள் தாளத்துடன் பாடியாடக்கூடிய வகையிலே, இனிய பாக்களை யாத்து குழந்தைகளுக்காக வெளியிடும் செயல் போற்றுதற்குரியது.

அவருடைய பாடல்களிலே பாலகர்கள் ஒன்றிலிருந்து பத்துவரை எண்ணிப்பழக ஒரு பாடல். அந்தப் பாடல் எண்ணப் பழகிக்

கொண்டே மனிதன் எப்படி வாழவேண்டும் என்று மென்மையாகக் குழந்தையினுடைய மனதிலே பண்புகளை நுழைக்கிறது. உயிரெழுத்து கற்பிக்கப் புறப்படும்போது அதனுள், நீ உயிருடன் இருந்தால் போதாது; உயர்ந்த மனிதனாய் எப்படி வளர வேண்டும் என்று அருமையாகக் கூறுகிறது. அப்படி உயர்ந்து வாழ்ந்தவர்கள் பெரியோர்களாக மதிக்கப்படுவார்கள் என்பது குழந்தையின் உள்ளத்தில் பதியும்படி காந்திப்பாடல் கூறுகிறது. இயற்கையோடும், இன்பத்தோடும் மொழி கற்க வேண்டும் என்ற தத்துவத்தை 'கொக்கண்ணா' 'நிலவே' போன்ற பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. தமிழீழம் என்கின்ற எம் தாயகத்தில், எம் உறவுகள் படும் துயரை, எமது சிறார்கள் மறந்துவிடாமற் பேணவேண்டும், அப்போதுதான் அவர்களுடைய மனதிலே தமிழுணர்வு நிலைத்து நிற்கும் என்பதை நூலாசிரியர் மனதிற்கொண்டு நூலை யாத்தமை அவருடைய பாடல்களிலே பரவலாகத் தெரிகிறது.

உண்மையிலேயே இவ்வளவு உயர்வுகளையுடைய நூலிலே கண்ணூறு பட்டதுபோல் ஓரிரு குறைகளையும் காணக்கூடியதாக

இருந்தது. அதையும் நான் கூறினால்தான் அது உண்மையான சிறப்புரையாகும். மாதங்கள் பற்றிப் பாட வந்த இடத்திலே தமிழர்கள் காலம் முழுவதும் கோயிலும், விரதமுமாய் அலைபவர்கள் என்ற தன்மையைக் காட்டுகின்றது. தமிழினம் தன் பெருமைகளையெல்லாம், கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இழந்துகொண்டு வந்ததே இந்தச் சாமி விவகாரத்தால்தான். இறை நம்பிக்கையும், பக்தியும், பணிவும் கட்டாயம் வேண்டும். ஆனால் இறைவனே கதி என்கிற உணர்வை குழந்தைகளுடைய மனதிலே ஊட்டுவது அவர்களை ஊட்டமுள்ள மனிதர்களாக வளரவிடாது. எதிர்காலத்தில் ஆசிரியர் எழுதப்போகிற நூல்களில் இதை மனதிற்கொண்டு செயற்படுவார் என்று நம்புகின்றேன். அனைவரும் இந்நூலைப் படித்து இன்புற வேண்டுகின்றேன். நூலாசிரியருக்கு வாழ்த்துக்கள்.

தமிழன்புடன்

**கே.ரி. கணேசலிங்கம்**

உலகத்தமிழ் பண்பாட்டியக்கப் பொதுச் செயலாளர்

உ.த.ப.இ. ஐரோப்பிய ஒன்றிய அமைப்பாளர்

செருமனி 11.01.2000

## சீருரை

*அன்புத் தம்பி சிவநேசன்*
*அழகுத் தமிழால் பாலகர்க்கு*
*அன்பும் பண்பும் எடுத்துரைத்து*
*அறவழி வாழென அறிவுரைத்து*
*பாப்பாப் பாட்டாய்த் தமிழெடுத்து*
*பாகாய் இனிக்கத் தந்துள்ளான்.*

*அகரம் தமிழின் உயிரென்றும்*
*அதுவே தமிழின் உயிரென்றும்*
*தமிழை மறந்தவர் உயிரற்ற*
*தாழியுள் கிடக்கும் பிணமென்றும்*
*மொழியே இனத்தின் விழியென்றும்*
*விளங்கக் கூறிப் பாட்டெடுத்தான்*

*சந்தத் தமிழில் தாளநடை*
*சார்ந்தே பாலகர் பாடியாட*
*இன்பத் தமிழின் இளசாக*

*இலகு தமிழால் தந்தானே.*
*எண்ணித் துணிந்த அவனாற்றல்*
*என்றும் நின்று தமிழுக்காய்*
*எழுந்து தமிழால் வாழட்டும்!*

*தமிழ்த்தாய் வாழத் தமிழீழம்*
*தாரணி போற்றத் தலைநிமிரும்*
*தலைநாள் விடியல் தெரிகிறது*
*தமிழின் இனிய மழலைகளே!*
*தமிழைக் கற்று மலருங்களே!*
*நீங்கள் வாழத் தமிழ் வாழும்*
*வாழ்க! தமிழால் வாழ்த்துகிறேன்.*

அழலாடி **நா.சி. கமலநாதன்**
'கமலம்' இதழ் ஆசிரியர்,
உலகத்தமிழ் பண்பாட்டியக்கத் தலைவர்
ஜெர்மனி
10.01.2000

# வாழ்த்துரை

**திருமிகு. சிவநேசன்,**
"மலரும் மாலைகள்"
கெமர்.

அன்புடையீர்!
வணக்கம்.

புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் எதிர்காலச் சந்ததியினரின் தாய்மொழியின் வளர்ச்சி கருதி தாங்கள் வெளியிடவுள்ள "புதிய மலர்கள்" சிறுவர் பாடல் தொகுப்பு நிச்சயமாக எம் சிறார்களின் தாய்மொழியறிவை வளர்க்க உதவும் என நம்புகின்றேன்.

இக் கவிப்பாடல்களை யாத்த நண்பர் சிவநேசன் அவர்கள் தமிழீழத்தின் விடியலிலும்,

தாய்மொழியின் வளர்ச்சியிலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். இக்கவிதை நூலைப்பெற்று தமது குழந்தைகளுக்கு பாடல்களினூடாக தாய்மொழியை இலகுவாக கற்பிக்கப் பெற்றோர்கள் முன் வரவேண்டும். குழந்தைகளுக்கான படைப்புக்கள் எதிர்காலத்தில் பல்கிப்பெருக புலம்பெயர்ந்த தமிழர்கள் உதவ வேண்டியது நமது வரலாற்றுக் கடமையாகும். மேலும் இப்புத்தக விற்பனை வருமானத்தை தாயகத்தில் அல்லலுறும் சிறுவர்களுக்கு ஆசிரியர் வழங்க இருப்பது வரவேற்கத்தக்கது. இவரது முயற்சி மென்மேலும் வளர மனதார வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

**நயினை விஜயன்**

தமிழருவி ஆசிரியர்,

தலைவர்-தமிழர் கலாச்சார நற்பணிமன்றம்

E.V. எசன்

மணிபல்லவம், யேர்மனி,

11.01.2000

# வாழ்த்துரை



அன்புத் தம்பி சிவநேசன் அவர்கள் "புதிய மலர்கள்" எனும் சிறுவர் பாடல்கள் அடங்கிய இதழ் ஒன்று வெளியிடுவதை அறிந்து மகிழ்வுறுகின்றேன். தாய்மொழியை மறந்து வெளிநாட்டில் வாழும் நம்மினக் குழந்தைகளுக்கு, அவர்கள் மொழியை மறக்காமல் இருக்க இலகு தமிழில், இனிய பாடல்களை, இதழாக வெளிக்கொண்டு வரும் தங்களின் முயற்சிக்கு வாழ்த்துக்கள்.

தாங்கள் கலை உலகிற்கு புதியவரல்ல என்பது நான் அறிந்த உண்மை மட்டுமல்ல; பலரும் அறிந்ததே. கலைக்காகவும், தமிழுக்காகவும் ஏதாவது செய்துகொண்டே இருக்க வேண்டும் என்ற ஆவலில் ஏழு ஆண்டுகளுக்கு முன்பே 'மலரும் மாலைகள்' எனும் பெயரில் தமிழ் வானொலிச் சேவை ஒன்றினை நடத்தி வந்ததை நான் அறிவேன். அதன்பின் இப்பொழுது 'மலரும் மாலைகள்' வீடியோப் பத்திரிகை ஒன்றினையும் நடத்தி வருகின்றார். அத்துடன் கவிதைகள், பாடல்கள் என எழுதி தனது கலை உணர்வை மேலும் வளர்த்துக்கொண்டுள்ளார். அதன்

வெளிப்பாடாகத்தான் தற்போது சிறுவர் பாடல்கள் அடங்கிய தொகுப்பு ஒன்றையும் வெளியிடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதுவது என்பது இலகுவான ஒன்றல்ல. குழந்தைகளின் உள்ளங்களை நன்கு புரிந்து, குழந்தையாகவே சிந்தித்து பாடல்களை எழுத வேண்டும். 'புதிய மலர்கள்' நூலினைப் பார்க்கும் போது ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு ரசிப்புத்தன்மை கொண்டதாக எழுதப்பட்டுள்ளது. 'பிள்ளையார்', 'ஆலயம்' போன்ற பாடல்கள் கடவுள் நம்பிக்கை ஊட்டுவதாக உள்ளது. 'அண்ணா-தம்பி' பாடல் மூலம் பெரியோர் சொல்கேட்டல் அவசியம் என்பதை ஆசிரியர் வலியுறுத்துகின்றார். இவ்வாறு ஒவ்வொரு பாடலும் குழந்தைகள் ரசித்து பாடி மகிழக்கூடியது மட்டுமின்றி அறிவூட்டுவனவாகவும் உள்ளது. ஆசிரியரின் பணி மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

**ப. யோகேஸ்வரன் (B.A.)**

ஆசிரியர்

இலண்டன், 11.01.2000

# வாழ்த்துரை

"இன்பத் தமிழ் ஒலி" 24 மணிநேர
தமிழ் ஒலிபரப்பு
அவுஸ்திரேலியா

**"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்வோம்"**

அன்பின் சிவநேசன்,

"புதிய மலர்கள்" சிறுவர் பாடல்கள் புத்தக வெளியீடு அறிந்து மகிழ்ச்சி.

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் புதுமைகள் படைப்பதிலும், பழமைகளைப் பேணுவதிலும் நம் தமிழ் மக்கள் ஆற்றும் பங்களிப்பு பாராட்டப்பட வேண்டியது. ஒலி அலையாய் எட்டுத் திக்கும் முழங்கும் இன்பத்தமிழ் போல், நம் எதிர்காலச் சந்ததியினர் தாய்மொழியாம் தமிழ்மொழி மறந்தவர்களாக வாழும் அபாயம் கண்டு,

அதனைத் தடுக்கும் முயற்சிகள் பல உலகமெலாம் நடைபெற்று வரும் இவ்வேளையில், புதிய ஆண்டில் தமிழர் திருநாளாம் 'தைப்பொங்கல்' தினத்தன்று வெளிவரும் 'புதிய மலர்கள்' எம் தமிழ் சிறார்களுக்கு பயன்தரும் சிறப்புத் தமிழ் மலர்கள் பல கொண்டு தமிழ்மணம் பரப்ப அவுஸ்திரேலியா வாழ் தமிழ் மக்கள் சார்பில் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
என்றென்றும் உங்கள் அன்பின்
**பாலசிங்கம் பிரபாகரன்**
இயக்குனர் 'இன்பத்தமிழ் ஒலி'

அவுஸ்திரேலியா
11-01-2000

# வாழ்த்துரை

இன்று நாம் புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ் வளர்ப்பது மிக.. மிக... கடினம். புலம் பெயர்ந்து வந்தவர்களின் தமிழ் இனத்தில், வருங்கால சந்ததியின் வாழ்வில் அக்கறை கொண்டு, அந்த சிறுவர்களுக்கு ''புதிய மலர்கள்'' என புதிய பாடல்கள் அடங்கிய இதழ் வெளிவருவது மிக்க மகிழ்ச்சி. அந்த வகையில் நண்பர் சிவநேசன் சிறுவர்களுக்காக எழுதிய பாடல்களில் என்னைக் கவர்ந்த வரிகள் ''நிலவே'' பாடலில் ''ஒருமுறை ஈழம் செல்வாயா உறவுகள் நிலமை சொல்வாயா'' என இன்று நம் உறவுகள் படும் துன்பத்தை உலகிற்கு எடுத்துக்கூற வேண்டும் என அழைப்பு விடுத்திருக்கின்றார்.

''தமிழ்மொழி'' பாடலில் ''அன்னை மொழியாய் தமிழ்மொழியை அனைவரும் படிக்க வேண்டுமென்பேன்'' எனவும் அனைத்து தமிழ் மக்களுக்கு தமிழ்மொழியின் கட்டாயத்தை வலியுறுத்துகின்றார்.

"ஆலயம்" பாடலில் "ஒற்றுமையுடனே நாம் இருப்போம் ஓர் உயிராக வாழ்ந்திடுவோம்" என அனைத்து தமிழ் மக்களையும் ஐக்கியமாக ஒன்றுபட்டால் உலகத்தின் தமிழினம் வெற்றிநடை போடும் என நண்பர் வடித்த கவிவரிகள் எல்லோர் மனங்களிலும் தாளம்போடும் என்பது உண்மை. சிவநேசன் என் நண்பர் என்பதற்காக கூறவில்லை. அவர் ஒரு கலைப்பொக்கிஷம். அவரின் "புதிய மலர்கள்" புதிய நூற்றாண்டின் புதிய வரவு, வரலாற்றுப் பதிவு. ஆசிரியர் எண்ணம் சிறக்க அவரின் எழுத்துப்பணி தொடர எல்லாம் வல்ல என் அன்னை தமிழ்தாயும், அப்பன் முருகனின் அருள்வேண்டி வாழ்க! வாழ்க!! வாழ்க!!! என வாழ்த்துகின்றேன்.

என்றும் உண்மை தமிழன்புடன்
பிரதம, நிர்வாக ஆசிரியர்
ஈழம் பத்திரிகை
"தமிழ்மணி" **பி.சி. இராசகருணா** (Dip.)
ஈழமுருகதாசன்.

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | பிள்ளையார் | 33 |
| 2. | யேசு | 34 |
| 3. | 1, 2 சொல்லிடுவோம் | 35 |
| 4. | சின்னஞ் சிறுவர் நாம் | 37 |
| 5. | தமிழ்மொழி | 39 |
| 6. | நிலாவே | 41 |
| 7. | மழையே வா | 42 |
| 8. | மாதங்கள் | 45 |
| 9. | ஆலயம் | 49 |
| 10. | உயிர் எழுத்துக்கள் | 50 |
| 11. | சுண்டெலி | 51 |
| 12. | எங்கள் வீட்டுத் தோட்டத்திலே | 53 |
| 13. | கடமைகள் | 54 |
| 14. | செடிகள் | 55 |
| 15. | பந்து | 57 |

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 16. | அண்ணா-தம்பி | 59 |
| 17. | நாவற்பழம் | 61 |
| 18. | தூக்கம் | 63 |
| 19. | மயில் | 65 |
| 20. | சூரியன் | 67 |
| 21. | ஒன்றும் ஒன்றும் இரண்டாகும் | 70 |
| 22. | பூனைக்குட்டி | 73 |
| 23. | ஊஞ்சல் | 74 |
| 24. | காந்தி | 77 |
| 25. | தம்பி | 79 |
| 26. | கோழிக்குஞ்சு | 81 |
| 27. | என் தங்கை | 83 |
| 28. | கொக்கண்ணா | 85 |
| 29. | ஒன்றாய் வாழ்வோம் | 86 |



# பிள்ளையார்

யார் யார் பிள்ளையார்
யாவருக்கும் அருள்பவர்!

கேள் கேள் அவரையே
கேட்ட வரம் கொடுப்பவர்!

அறிவினாலே அன்னையர்
அன்பைப் பெற்ற பிள்ளையார்!

பாலமுருகன் தம்பி மேல்
பாசம் உள்ள பிள்ளையார்!

பாலகர்கள் எங்களுக்கு
பாடம் சொல்லும் பிள்ளையார்!

யார் யார் பிள்ளையார்
யாவருக்கும் அருள்பவர்!

# யேசு

எமக்காய் மண்ணில் பிறந்தவரே
யேசு பிரான் என்பவரே!
எத்தனை துன்பம் பட்டாரே
எல்லோர் வாழ்வும் நலம் பெறவே!

சிறிய வயதில் கொடுமைகளை
சிறிதாய் மதித்து வாழ்ந்தாரே!
தந்தை சொற்படி நடந்தாரே
தன்னை உலகுக்கு கொடுத்தாரே!
மண்ணில் மனிதர்கள் நலமுடனே
மகிழ்வாய் வாழச் செய்தவரே!

மக்களின் பாவங்கள் நீங்கிடவே
மரச்சிலுவை அவரும் சுமந்தாரே!
அரக்கர் செய்த கொடுமையினால்
அவரும் உயிரை துறந்தாரே!
மீண்டும் ஒருநாள் வருவாரே
மேதினி செழிக்க உதவிடவே!

# 1, 2 சொல்லிடுவோம்

1 2 சொல்லிடுவோம்
ஒற்றுமை உணர்வை நாம் வளர்ப்போம்!

3 4 சொல்லிடுவோம்
முயற்சி என்றும் நாம் செய்வோம்!

5 6 சொல்லிடுவோம்
அறிவு நூல்கள் நாம் படிப்போம்!

7 8 சொல்லிடுவோம்
எல்லோரும் ஒன்றென நாம் வாழ்வோம்

9 10 சொல்லிடுவோம்
உலகைச் சுற்றி வலம் வருவோம்!



# சின்னஞ் சிறுவர் நாம்

சின்னச் சின்ன சிறுவர்கள் நாம்
சிந்தனையின் சிற்பிகள் நாம்!

எண்ணம் எல்லாம் எம்படைப்பு
ஏற்றிடுவர் பெற்றோர் ஓர் விளக்கு!

வண்ணம் பல வடித்துவிட்டால்
வார்த்தையால் எமை போற்றிடுவார்!

துள்ளி நாம் ஓடினாலும்
தூக்கித் தோளினில் போட்டிடுவார்!

பள்ளி முடிந்து வருகையிலே
அள்ளி எம்மை அணைத்திடுவார்!

அன்பு முத்தங்கள் பல தந்து
அறிவுப் பாதையில் வளர்த்திடுவார்!


தமிழ்
தமிழ்

# தமிழ்மொழி

அன்னை மொழியாம் தமிழ்மொழியை
அனைவரும் படிக்க வேண்டுமென்பேன்

எந்த நாட்டில் வாழ்ந்தாலும்
எங்கள் மொழியே தமிழ்மொழியாம்

பிறமொழிகளை நாம் பயின்றிடுவோம்
பிறப்பு மொழியை மறவாமல்

சிறப்பு நிறைந்த மொழி எங்கள்
செந்தமிழ் என்பதை உணர்ந்திடுங்கள்

அன்புக் குழந்தைகள் அனைவருக்கும்
அன்னை மொழியை ஊட்டுங்கள்

அதுவே உங்கள் கடமை என
ஆயுள் வரைக்கும் எண்ணுங்கள்

அன்றே வளரும் தாய் மொழியாம்
அகிலம் போற்றும் தமிழ் மொழியாம்.



# நிலாவே

நிலவே நிலவே நில்லிங்கே
நீ யார் என்பதை சொல்லிங்கே!
வானில் தினசரி வருகின்றாய்
வட்டமாகவும் இருக்கின்றாய்!

வாரம் இரண்டு ஆகிவிட்டால்
வற்றிப் பாதி ஆகின்றாய்!
ஏன் இப்படி ஆகின்றாய்?
எனக்கு ஒருமுறை சொல்வாயா?

தமிழீழம் நீ அறிந்தாயா!
தமிழர் படும் துயர் அறிவாயா!
ஒரு முறை ஈழம் செல்வாயா?
உறவுகள் நிலையை சொல்வாயா?

பாரில் நம்மினம் படும் துயரை
பார்த்து நீயும் இருப்பாயா!
பரப்பு எம்மவர் துயரங்களை
பறந்து பறந்து உலகெல்லாம்!

# மழையே வா



மழையே மழையே வருவாயா
மகிழ்வை எமக்குத் தருவாயா
மறைவாய் நீயும் இருப்பது ஏன்?
மனவருத்தம் தருவது ஏன்?

கப்பல் ஒன்றை செய்து வைத்து
காவல் தினமும் இருந்தேனே!
காலை வந்து பார்ப்பேனே
கவலை கொண்டு இருப்பேனே!
மழையே மழையே.........

மேகம் கறுப்பாய் இருந்து விட்டால்
மேனி எல்லாம் சிலிர்த்து விடும்
மழையும் வரவே இல்லை என்றால்
மனத்துள் சோகம் கொள்வேனே!
மழையே மழையே............

எந்தன் கப்பல் நீர் இன்றி
தரையில் இருப்பதை பார்க்காயோ!
எங்கள் வீட்டு முற்றத்திலே
எப்போ மழை நீ வருவாயோ!
மழையே மழையே............



# மாதங்கள்

தை மாதம் பிறந்தாலே
பொங்கல் திருநாள் வந்திடுமே!
மாசி மாதம் பிறந்தாலே
சிவ ராத்திரி வந்திடுமே!

பங்குனி மாதம் பிறந்தாலே
பல நன்மைகள் கூடி வந்திடுமே!
சித்திரை மாதம் பிறந்தாலே
வருடப் பிறப்பு வந்திடுமே!

வைகாசி மாதம் பிறந்தாலே
வறுமை எல்லாம் சென்றிடுமே!
ஆனி மாதம் பிறந்தாலே
ஆனந்தம் வாழ்வில் வந்திடுமே!

ஆடி மாதம் பிறந்தாலே
ஆடிப் பிறப்பு வந்திடுமே!
ஆவணி மாதம் பிறந்தாலே
விழாக்கள் பல வந்திடுமே!

புரட்டாசி மாதம் பிறந்தாலே
நவ ராத்திரி வந்திடுமே!
ஐப்பசி மாதம் பிறந்தாலே
தீபாவளி திருநாள் வந்திடுமே!

கார்த்திகை மாதம் பிறந்தாலே
கார்த்திகை தீபம் வந்திடுமே!
மார்கழி மாதம் பிறந்தாலே
நத்தார் பெருநாள் வந்திடுமே!

# சுண்டெலி

சுண்டெலியே சுண்டெலியே
செய்தி சொல்வாயோ? - நீ
சுதந்திரமாய் திரியும் நேரம்
எப்போ சொல்வாயோ?

சின்னஞ் சிறு கால்களினால்
வீட்டினுள்ளே தந்திரமாய் வந்து
உள் இருக்கும் உணவை
ஆனந்தத்துடன் உண்டு மகிழும்
சுண்டெலியே சுண்டெலியே
செய்தி சொல்வாயோ? - நீ
சுதந்திரமாய் திரியும் நேரம்
எப்போ சொல்வாயோ?

கத்தி இல்லை வாளுமில்லை
கைகளிலும் ஆயுதமில்லை
உன் இரு பற்களால்
வெட்டியும் அரித்தும் தின்னும்
சுண்டெலியே சுண்டெலியே
செய்தி சொல்வாயோ? - நீ
சுதந்திரமாய் திரியும் நேரம்
எப்போ சொல்வாயோ?



# ஆலயம்

அண்ணா இங்கே வாருங்கள்
ஆலயம் தொழுவோம் வாருங்கள்!

இங்கே இருக்கும் ஆலயமே
ஈன்றவர் எம்மை போன்றதுவே!

உன்னை என்னை காத்திடுமே
ஊருக்குள் நல்லதை செய்திடுமே!

என்றும் எமக்கு துணை புரியும்
ஏக்கம் வேண்டாம் வாருங்கள்!

ஐக்கியமாக வாழ்வதற்கு
ஆண்டவன் துணை எமக்குண்டு!

ஒற்றுமையுடனே நாம் இருப்போம்
ஓர் உயிராக வாழ்ந்திடுவோம்!

ஔவை வழியில் நாம் நடப்போம்
அஃதே இனிதாய் வாழ்ந்திடுவோம்!

# உயிர் எழுத்துக்கள்

அ ஆ நான் படிப்பேன்
அறிவாளியாய் நான் வருவேன்

இ ஈ நான் படிப்பேன்
இளமையில் கல்வியை நான் படிப்பேன்

உ ஊ நான் படிப்பேன்
உத்தமனாக நான் வருவேன்

எ ஏ நான் படிப்பேன்
என்றும் ஏழைக்கு உதவிடுவேன்

ஐ ன்னாவென நான் படிப்பேன்
ஐம்புலன்களும் அடக்கி வாழ்வேன்

ஒ ஓ நான் படிப்பேன்
ஒற்றுமையாய் என்றும் வாழ்ந்திடுவேன்

ஔ ஃ நான் படிப்பேன்
ஔவை வழியில் உயர்ந்திடுவேன்



அ ஆ இ

ஈ உ ஊ

எ ஏ ஐ

ஒ ஓ ஔ

ஃ



# எங்கள் வீட்டுத் தோட்டத்திலே

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
தினமும் நடப்பதைப் பார் பார்!

தேனைக் குடிக்க வண்டு இங்கு
தேடி வருவதைப் பார் பார்!

பூக்கள் மேலே வண்டு வந்து
தேனைக் குடிப்பதைப் பார் பார்!

சின்னஞ் சிறிய வண்டு அது
சிறகு அடிப்பதைப் பார் பார்!

எண்ண முடியா வேகத்திலே
எங்கும் பறப்பதைப் பார் பார்!

தம்பியின் தலைக்கு மேலாலே
தாவிப் பறப்பதைப் பார் பார்!

# கடமைகள்

கணக்கிட்டே நாம் வாழ்ந்திடுவோம்
கவலை இன்றி வாழ்ந்திடுவோம்!
நாலை எட்டாய் பிரித்திடுவோம்
நல்ல காரியங்கள் செய்திடுவோம்!

காலை எழுந்து முகம் கழுவி
காலைக் கடமைகள் முடித்திடுவோம்!
பாடசாலை செல்ல முன்பே
பாடங்கள் ஒருமுறை படித்திடுவோம்!

உணவு உண்டு வாழ்ந்திடுவோம்
உடற்பயிற்சியும் செய்திடுவோம்!
வீட்டுப் பாடம் படித்திடுவோம்
வீட்டில் அன்னைக்கு உதவிடுவோம்!


பூச்செடிக்கு நீர் விடுவோம்
பொதுத் தொண்டும் செய்திடுவோம்!
காலை மாலை இருவேளை
கடமைகள் செய்து வாழ்ந்திடுவோம்!

# செடிகள்


சிறுவர் நாங்கள் செடி வளர்ப்போம்
சிறந்த நல்ல பயன் பெறுவோம்
கனிகள் தருகின்ற செடிகளையே
கவனமாக வளர்த்திடுவோம்

காலை மாலை இரு வேளை
களிப்புடன் நீரை ஊற்றிடுவோம்
பூச்சி புழுக்கள் தின்னாமல்
பூச்சி மருந்து அடித்திடுவோம்

பூத்துக் காய்கள் தொங்கையிலே
பார்த்து மகிழ்ந்து இருந்திடுவோம்
வீட்டுத் தேவைக்கு எடுத்திடுவோம்
வீண் பொழுதினை மறந்திடுவோம்



# பந்து



பந்து சின்னப் பந்து
எந்தன் ஆசைப் பந்து!

வட்ட மான பந்து
வடிவான பந்து!

பஞ்சு போல் பந்து
பல வர்ணப் பந்து!

தம்பி கையில் பந்து
தங்க மான பந்து!

எங்கள் வீட்டு நாய்க்குட்டி
என்றும் ஆடும் பந்து!

என்னைப் போன்ற பந்து
அம்மா தந்த பந்து!



# அண்ணா தம்பி

அண்ணா : தம்பி இங்கே வாருங்கள்
தம்பி : கால் வலிக்குது மாட்டேனே!

அண்ணா : தம்பி தமிழைப் படியுங்கள்
தம்பி : தலை இடிக்குது முடியாதே!

அண்ணா : தம்பி கடைக்கு வாருங்கள்
தம்பி : தாத்தா அடிப்பார் மாட்டேனே!

அண்ணா : அண்ணா சொல்லை தட்டாதே
அறிவாய் பின்பு நீ தம்பி!

தம்பி : ஐயோ அண்ணா வாருங்கள்
ஆபத்து எனக்கு உதவுங்கள்!
கை கால் எல்லாம் வலிக்கிறதே
கடவுள் போலே உதவுங்கள்!

அண்ணா : வந்தேன் தம்பி, நான் வந்தேன்
நடந்தவற்றை நான் அறிவேன்!

பொய் சொல்லக் கூடாதே
புரிந்தால் உனக்கு நன்மை தம்பி!

தம்பி அண்ணா என்னை மன்னியுங்கள்
என்னில் அன்பு செலுத்துங்கள்!
என்றும் உங்கள் சொல்படியே
ஆயுள் வரைக்கும் நடப்பேனே!

# நாவற்பழம்

நாவல் பழமே நாவல் பழமே
நல்ல நாவல் பழம் நீயே!

நாவல் நிறத்துக் குண்டுப் பழமே
நாவுக்கு ருசித்திடும் பழம் நீயே!

அண்ணா அக்கா விரும்பியே
உண்ணும் ஆசைப் பழம் நீயே!

அன்று ஔவைப் பாட்டிக்கே
அறிவு ஊட்டிய பழம் நீயே!

என் போன்ற சிறுவர்க்கே
ஏக்கம் தரும் பழம் நீயே!

எப்போ எங்கள் கைகளிலே
எட்டும் நாவல் பழம் நீயே!







# தூக்கம்

தெருவில் வடை விற்கும் சிறுவன் அவன்
தினமும் தூக்கம் செய்வானாம்!
காலை வேளை கடைத் தெருவில்
களைப்பாய் உறக்கம் கொள்வானாம்!
மாலை நேரம் வரைக்கும் அவன்
மகிழ்வாய் நித்திரை கொள்வானாம்!

தினமும் இப்படி செய்வதையே
திருட்டுக் காகம் கண்டதுவே!
ஒரு நாள் சிறுவன் தூங்கையிலே
உள்ள வடைகள் யாவையுமே!
எடுத்துக் கொண்டு சென்றதுவே
எல்லா வடையும் தின்றதுவே!

விழித்துப் பார்த்த சிறுவனுக்கோ
வியர்வை முகத்தை நனைத்ததுவே!
அன்று முதல் அவனுமே
தூக்கத்தை மறந்து போனானே!
தூக்கத்தின் விளைவை உணர்ந்தானே
உழைப்பில் ஊக்கம் கொண்டானே!



# மயில்

மயிலே மயிலே நில்லிங்கே!
மகிழ்வாய் கதை ஒன்று சொல்லிங்கே


மழையைக் கண்டால் உன் மனமும்
மகிழ்வு கொள்வதை சொல்லிங்கே!

தினமும் தினமும் நீ எங்கே
சென்று வருவதை சொல்லிங்கே!

தேகப் பயிற்சி செய்திடவோ
தினமும் சென்று வருகின்றாய்!

அழகு நிறைந்த சிறகுகளை
அள்ளித் தந்தது யார் உனக்கே!

ஆண்டவன் என்று சொல்கின்றேன்
அன்னையிடம் நீ கேட்டறிவாய்!



# சூரியன்

சூரியன் அண்ணா வா! வா!
சூடாய் வெப்பம் கொண்டு வா!
மழை தரும் மேகத்தை மறைத்து வா!
மகிழ்வாய் எமக்கு செய்தி தா!

சூரியன் அண்ணா வா! வா!
சூடாய் வெப்பம் கொண்டு வா!

கைகள் குளிரால் விறைக்கின்றது
கால்கள் குளிரால் விறைக்கின்றது
குளிரால் நாமும் வாடுகின்றோம்
குளிரைக் கலைக்க ஓடி வா!

சூரியன் அண்ணா வா! வா!
சூடாய் வெப்பம் கொண்டு வா!

இரவில் எங்கே செல்கின்றாய்?
இருளாய் எங்கும் இருக்கின்றது
கருமேகத்தை கலைத்து வா!
காலை வேளை எழுந்து வா!

சூரியன் அண்ணா வா! வா!
சூடாய் வெப்பம் கொண்டு வா!

$$1 + 1 = 2$$

$$2 + 1 = 3$$

$$3 + 1 = 4$$

$$4 + 1 = 5$$

$$5 + 1 = 6$$

$$6 + 1 = 7$$

$$7 + 1 = 8$$

$$8 + 1 = 9$$

$$9 + 1 = 10$$


# ஒன்றும் ஒன்றும் இரண்டாகும்


ஒன்றும் ஒன்றும் இரண்டாகும்
உண்மை சொன்னால் உயர்வாகும்
இரண்டும் ஒன்றும் மூன்றாகும்
மூத்தவர் சொல்லை மதிப்போம் நாம்

மூன்றும் ஒன்றும் நாலாகும்
நல்லவராக வாழ்வோம் நாம்
நாலும் ஒன்றும் ஐந்தாகும்
ஐக்கியம் உயர்வை தந்திடுமாம்

ஐந்தும் ஒன்றும் ஆறாகும்
அன்புடன் வாழ்ந்தால் சிறப்பாகும்
ஆறும் ஒன்றும் ஏழாகும்
ஏழைக்கு உதவுதல் நன்றாகும்

ஏழும் ஒன்றும் எட்டாகும்
என்றும் உண்மை நிலையாகும்
எட்டும் ஒன்றும் ஒன்பதாகும்
ஓய்வின்றி உழைத்தால் உயர்வாகும்
ஒன்பதும் ஒன்றும் பத்தாகும்
பல்கலையும் படித்தால் பயனாகும்.





# பூனைக்குட்டி

எங்கள் வீட்டுப் பூனைக் குட்டி
எல்லாமாக மூன்று குட்டி

வெள்ளை நிறத்தில் ஒரு குட்டி
வேட்டையாட நல்ல குட்டி

மண் நிறத்தில் ஒரு குட்டி
மகிழ்ச்சி தரும் சிறு குட்டி

இன்னும் ஒரு சிறு குட்டி
எனக்குப் பிடித்த கறுப்புக் குட்டி

எல்லாம் எனது செல்லக் குட்டி
என்னுடன் சேர்த்து நாலு குட்டி

எலியைக் கண்டால் பாயும் குட்டி
எனது ஆசைச் செல்லக் குட்டி

## ஊஞ்சல்

ஆலமரத்தின் விழுதினிலே
ஆடுவேன் ஊஞ்சல் கட்டியே!

அம்மா கட்டிய ஊஞ்சல்
அழகு மிக்க ஊஞ்சல்

சும்மா இருந்தால் ஆடுமே
சோகம் எல்லாம் போகுமே

வெள்ளி நிலவைப் பார்த்து நான்
வேகமாக ஆடுவேன்

பனை மரங்கள் பக்கத்தில்
பாலன் நானும் ஆடுவேன்

காலை வேளை எழுந்ததுமே
கவலை இன்றி ஆடுவேன்

மாலை வரைக்கும் ஆடுவேன்
மகிழ்ச்சியுடன் நான் ஆடுவேன்





# காந்தி

அம்மா என்னைப் பாருங்கள்
ஆசை முத்தம் தாருங்கள்
அறிஞர் கதைகள் கூறுங்கள்
அறிய எனக்கு சொல்லுங்கள்

காந்தி தாத்தா கதை சொல்வேன்
கவனமாக கேளுங்கள்
காந்தி தாத்தா கதை கேட்டு
கரும வீரர் ஆகுங்கள்

இந்திய மண்ணை காத்திடவே
இவரெத்தனை துன்பம் பட்டாரே
வெள்ளைக்காரன் ஆட்சியையே
விரட்டி அடிக்கச் செய்தவரே

தர்ம வழியை போதித்தார்
தானும் வாழ்ந்து காட்டினார்

அகிம்சை வழியில் போராடி
அவர்தம் ஆசையை வென்றாரே

காந்தி தாத்தா கதை சொன்னேன்
கவனமாக கேட்டீரோ
காந்தி தாத்தா கதை கேட்டு
கரும வீரர் ஆகுங்கள்.

# தம்பி

எந்தன் தம்பி சின்னத்தம்பி
என்னுடைய ஆசைத்தம்பி!

கொஞ்சும் தமிழ் பேசும் தம்பி
கொஞ்சி விளையாடும் தம்பி!

கறுப்புச் சட்டை போடும் தம்பி
காலையில் எழுந்து அழும் தம்பி!

கண்டதை எல்லாம் கடிக்கும் தம்பி
கடிந்து பேச கதறும் தம்பி!

ஆசை மிகுந்த என் தம்பி
அழகு கொண்ட என் தம்பி!



# கோழிக்குஞ்சு

கோழிக் குஞ்சே நில் இங்கே
கோபம் கொண்டு ஓடாதே!

உன்னைப் பிடிக்க மாட்டேனே
உணவாய் சமைக்க மாட்டேனே!

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
ஏனோ தினமும் வருகின்றாய்!

உன்னைப் பிடிக்க பலர் அங்கே
ஒளித்திருப்பதை சொல்வேனே!

வெள்ளை நிறம் உன் உள்ளமே
வெள்ளை என்பதை அறிவேனே!

நாமும் சொல்வதை கேட்டாலே
நலமாய் தினமும் வாழ்வாயே!



# என்தங்கை

என் தங்கை என் தங்கை
என்றும் அவள் என் தங்கை

உண்ணும் போதும் என் தங்கை
உறங்கும் போதும் என் தங்கை

சட்டை அணிவாள் என் தங்கை
சாய்ந்து ஆடுவாள் என் தங்கை

அக்கா சொல்வாள் என் தங்கை
அண்ணா சொல்வாள் என் தங்கை

பொட்டு வைப்பாள் என் தங்கை
பூவும் வைப்பாள் என் தங்கை

பள்ளிக்குச் செல்வாள் என் தங்கை
பலதும் கற்பாள் என் தங்கை

பாரில் உயர்வாள் என் தங்கை
பார்த்து மகிழ்வேன் என் தங்கை.



# கொக்கண்ணா

கொக்கண்ணா கொக்கண்ணா
குளத்தில் இருக்கும் கொக்கண்ணா!

கழுத்தில் நீளம் கொக்கண்ணா
கால்கள் நீளம் கொக்கண்ணா!

மீனைப் பிடிக்கும் கொக்கண்ணா
மீசை இல்லா கொக்கண்ணா!

ஒற்றைக் காலில் கொக்கண்ணா
ஓயாமல் நிற்பது ஏனண்ணா?

வெற்றுக் காலாய் ஒரு காலை
வைத்து இருப்பது ஏனண்ணா?

கள்ளமாக மீன் பிடித்து
கௌவிக்கொள்ளும் கொக்கண்ணா!

வெள்ளை நிறத்துக் கொக்கண்ணா
வெள்ளை உள்ளம் உமக்குண்டா!

# ஒன்றாய் வாழ்வோம்

கூட்டமாக வாழ்வோமே
குருவிகளை பார்த்தே நாம்!

கூட்டமாக வாழ்ந்தாலே
கூண்டில் அடைக்க முடியாதே!

வீட்டில் நாம் ஒற்றுமையாய்
வீரமாய் இருப்போமே!

குருவியைப் போல் வாழ்ந்தாலே
நம் குலம் என்றும் அழியாதே!

நாட்டிலும் வீட்டிலும் நாம்
கூடி ஒன்றாய் வாழ்வோமே!

# பெருக்கல் வாய்ப்பாடு

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| 1x 1 | 1x 2 | 1x 3 | 1x 4 | 1x 5 | 1x 6 | 1x 7 | 1x 8 |
| 2x 2 | 2x 4 | 2x 6 | 2x 8 | 2x 10 | 2x 12 | 2x 14 | 2x 16 |
| 3x 3 | 3x 6 | 3x 9 | 3x12 | 3x 15 | 3x 18 | 3x 2 | 3x 24 |
| 4x 4 | 4x 8 | 4x 12 | 4x16 | 4x 20 | 4x 24 | 4x 28 | 4x 32 |
| 5x 5 | 5x 10 | 5x 15 | 5x20 | 5x 25 | 5x 30 | 5x 35 | 5x 40 |
| 6x 6 | 6x 12 | 6x 18 | 6x24 | 6x 30 | 6x 36 | 6x 42 | 6x 48 |
| 7x 7 | 7x 14 | 7x 21 | 7x28 | 7x 35 | 7x 2 | 7x 49 | 7x 56 |
| 8x 8 | 8x 16 | 8x 24 | 8x32 | 8x 40 | 8x 48 | 8x 56 | 8x 64 |
| 9x 9 | 9x 18 | 9x 27 | 9x36 | 9x 45 | 9x 54 | 9x 63 | 9x 72 |
| 10x10 | 10x 20 | 10x 30 | 10x40 | 10x 50 | 10x 60 | 10x 70 | 10x 80 |
| 11x11 | 11x 22 | 11x 33 | 11x44 | 11x 55 | 11x 66 | 11x 77 | 11x 88 |
| 12x12 | 12x 24 | 12x 36 | 12x48 | 12x 60 | 12x 72 | 12x 84 | 12x 96 |
| 13x13 | 13x 26 | 13x 39 | 13x52 | 13x 65 | 13x 78 | 13x 91 | 13x104 |
| 14x14 | 14x 28 | 14x 42 | 14x56 | 14x 70 | 14x 84 | 14x 98 | 14x112 |
| 15x15 | 15x 30 | 15x 45 | 15x60 | 15x 75 | 15x 90 | 15x105 | 15x120 |
| 16x16 | 16x 32 | 16x 48 | 16x64 | 16x 80 | 16x 96 | 16x112 | 16x128 |

| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
|---|---|---|---|---|---|---|---|
| 1x 9 | 1x 10 | 1x 11 | 1x 12 | 1x 13 | 1x 14 | 1x 15 | 1x 16 |
| 2x 18 | 2x 20 | 2x 22 | 2x 24 | 2x 26 | 2x 28 | 2x 30 | 2x 32 |
| 3x 27 | 3x 30 | 3x 33 | 3x 36 | 3x 39 | 3x 42 | 3x 45 | 3x 48 |
| 4x 36 | 4x 40 | 4x 44 | 4x 48 | 4x 52 | 4x 56 | 4x 60 | 4x 64 |
| 5x 45 | 5x 50 | 5x 55 | 5x 60 | 5x 65 | 5x 70 | 5x 75 | 5x 80 |
| 6x 54 | 6x 60 | 6x 66 | 6x 72 | 6x 78 | 6x 84 | 6x 90 | 6x 96 |
| 7x 63 | 7x 70 | 7x 77 | 7x 84 | 7x 91 | 7x 98 | 7x105 | 7x112 |
| 8x 72 | 8x 80 | 8x 88 | 8x 96 | 8x104 | 8x112 | 8x120 | 8x128 |
| 9x 81 | 9x 90 | 9x 99 | 9x108 | 9x117 | 9x126 | 9x135 | 9x144 |
| 10x 90 | 10x100 | 10x110 | 10x120 | 10x130 | 10x140 | 10x150 | 10x160 |
| 11x 99 | 11x110 | 11x121 | 11x132 | 11x143 | 11x154 | 11x165 | 11x176 |
| 12x108 | 12x120 | 12x132 | 12x144 | 12x156 | 12x168 | 12x180 | 12x192 |
| 13x117 | 13x130 | 13x143 | 13x156 | 13x169 | 13x182 | 13x195 | 13x208 |
| 14x126 | 14x140 | 14x154 | 14x168 | 14x152 | 14x196 | 14x210 | 14x224 |
| 15x135 | 15x150 | 15x165 | 15x180 | 15x195 | 15x210 | 15x225 | 15x240 |
| 16x144 | 16x160 | 16x176 | 16x192 | 16x208 | 16x224 | 16x240 | 16x256 |

# விற்பனையாகும் இதர நூல்கள்!

## குழந்தை நலம் - Paediatrics

குழந்தை பிறந்தவுடன் என்ன செய்ய வேண்டும்? ----------- 13.00
குழந்தை மருத்துவரின் பயனுள்ள யோசனைகள் ----------- 12.00
குழந்தைகளின் வயிற்றுப் போக்கைத் தடுப்பது எப்படி? ---- 18.00
பிள்ளைகள் ஆரோக்கியத்தில் பெற்றோரின் பங்கு ---------- 9.00
இளம்பிள்ளை வாதம் ---------------------------------- 9.00

## மழலைச் செல்வம் - Children

குழந்தை இல்லாத குறையா? --------------------------- 20.00
ஆண் குழந்தை பெற வேண்டுமா? ---------------------- 16.00
குழந்தை வளர்ப்பு கலையா? கவலையா? ---------------- 34.00

## பெயர் - Name

குழந்தைகளுக்குச் சூட்ட அழகான பெயர்கள் ------------- 26.00
உங்கள் குழந்தைகளுக்கு அதிர்ஷ்டப் பெயர்கள் சூட்டுவது எப்படி? ------------ 15.00
குழந்தைகளுக்கான தமிழ்ப் பெயர்களும் பெரியவர்களுக்கான புனைப் பெயர்களும் ---------- 21.00


## ஒப்பனை - Make up

அழகுக் குறிப்புகள் ------------------------------------ 24.00
அழகாய் இருப்பது எப்படி? ---------------------------- 18.00
முக அழகைப் பாதுகாப்பது எப்படி? -------------------- 12.00
உடையலங்காரமும் நகையலங்காரமும் ------------------- 9.75
நீங்களும் மேக்கப் செய்யலாம்! ------------------------ 21.00
பெண்களுக்குரிய கை, கால் மருதாணி மாதிரிகள் ---------- 30.00
புவனாவின் ஆரோக்கிய அழகுக்கலை முறைகள் ---------- 16.00

## முடியலங்காரம் - Hair Dressing

கொண்டை அலங்காரங்களும், கூந்தல் பராமரிப்பும் ----------- 15.00
தலைமுடியைப் பாதுகாப்பது எப்படி? -------------------- 20.00

## இந்நூலாசிரியரைப் பற்றி...



என்.வி.சிவநேசன்

யாழ்ப்பாணம், ஆனைக் கோட்டையில் பிறந்த எனது மகன் சிறு வயது முதற்கொண்டே கலையார்வம் மிக்கவர். கவிதைகள், பாடல்கள் எழுதுவதிலும் மிகுந்த நாட்டம் கொண்டவர்.

இவரின் கலையுணர்வு வெளிப்பாடாக ஐரோப்பாவில் முதன்முதலில் உள்ளூர் வானொலிச் சேவை ஒன்றினை நடாத்தி வந்தவர். தற்போது "மலரும் மாலைகள்" வீடியோ பத்திரிகை ஒன்றினையும் நடாத்தி வருகிறார். தமிழ்ச் சிறுவர்களின் நலன் கருதி சிறுவர் பாடல்களை எழுதி அவற்றை நூலாக உருவாக்கி, குழந்தைகளின் கைகளில் தவழ அவர் எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது .

பாடல் வாயிலாக பல சீரிய சிந்தனைகளை குழந்தைகட்கு பாலில் தேன் கலந்ததுபோல சுவையுடன் தந்துள்ளார். இவரை மகனாக அடைந்ததற்கு நான் மிகவும் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இவரின் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"



- திருமதி வேலு சின்னம்மா